**EP.No. 22/2022 In OS.NO.135/2002 PW-1**

நாள் : 28.07.2025

பெயர் : உமாபதி

த/பெ : சின்னகண்ணு

**தீர்ப்பு கடனாளர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

நான் தாக்கல் செய்துள்ள நிறைவேற்று மனுவில் 3 வது நபரான அசோகன் என்பவரையும் எதிரியாக சேர்த்து தான் மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அசோகன் என்பவரும் நீதிமன்ற உத்திரவை மீறி செயல்படுகிறார் அவரை தண்டிக்க வேண்டும் என்று கோரி தான் மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அசோகன் என்வர் முருகானந்தத்திற்கு எதிராக தாக்கல் செய்துள்ள வழக்கு எண் O.S.No.42/2020 மாண்புமிகு மாவட்ட கூடுதல் அமர்வு நீதிமன்றம், இராணிப்பேட்டையில் நடைபெற்று வருகிறது என்றால் சரிதான். அந்த வழக்கில் அசோகனுக்கு சார்பாக முருகானந்ததிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். முருகானந்தத்தின் மனைவி தான் ரேவதி என்றால் சரிதான். ரேவதி கிரயம் பெற்ற சொத்து தொடர்பாக தான் அவ்வழக்கில் நான் சாட்சியம் அளித்தேன் என்றால் இல்லை. பொதுவாக தான் சாட்சியம் அளித்தேன்.

10.01.2020 ல் ரேவதி க/பெ முருகானந்தம் என்பவர் எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்றால் சரியல்ல. நான் அந்த வழக்கறிஞர் அறிவிப்பை பெற்ற பின்பு தான் இந்த நிறைவேற்று மனுவை தாக்கல் செய்தேன் என்றால் இல்லை. நான் அசோகனுக்கும் முருகானந்ததிற்கும் நடந்த தனிப்பட்ட பிரச்சனையில்

முருகானந்தத்தை பழிவாங்கும் எண்ணத்தில் அசோகன் தூண்டுதலின் பேரில் இந்நிறைவேற்று மனு தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. இந்நாள் வரை நானும் அசோகனும் நல்ல முறையில் தான் பழகி வருகிறோம் என்றால் சரிதான். இந்த வழக்கில் அசோகன் எதிர்வாதம் எதுவும் செய்யவில்லை என்றால் அதற்கு நான் பொறுப்பேற்க முடியாது அனைவருக்கும் தான் நான் அறிவிப்பு அனுப்பினேன். முருகானந்தம் எந்தவித நீதிமன்ற உத்திரவு மீறலில் ஈடுபடவில்லை என்றாலும் அசோகன் தூண்டுதலினால் தான் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. இம்மனு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

Typewritten to my dictation in open Court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by witness to be corrected.

SADASIVAM POORNIMA
District Munsif cum Judicial Magistrate, Ranipet
Digitally signed by SADASIVAM POORNIMA
Date: 2025.07.29 10:45:30 +0530

District Munsif cum Judicial Magistrate,

Ranipet.